உ

சிவமயம்.

பக்தி பாசுரம்.

228
4.22

இஃது

விருதுபட்டி சங்கீத சாஹித்ய வித்வான்,

மகா-ரா-ரா-ஸ்ரீ

அ. கந்தசாமிக் கவிராயரவர்களால்

இயற்றி ஷை யாரால்

விருதுபட்டி ஸ்ரீமான்,

இராமலிங்கக் குருக்களவர்களது

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

[அணா 1.

1922

(2.4)
N22
18442

சிவமயம்.

பக்தி பாசுரம்.

விநாயகர் துதி.

வெண்பா.

லையகதி யுள்ளோர் வணங்கித் துதிக்குமுயர்
தெய்வபக்தி பாசுரத்தைச் செப்புதற்கு—மைதிகழும்
லெற்பகத்தில் வாழுமொரு வேழமுகத் தானுபய
நற்பதத்தைப் பூசிப்போம் நாம்.

கடராஜா என்ற மெட்டு.

இராகம்-நாட்டை தாளம்-ஆதி.

பல்லவி.

கணநாதா கஜமுகக் (கண

அனுபல்லவி.

கஜமுகக் கடவுளே நீ அடவுடனே
யருள் புரி (கண

சரணங்கள்.

மனம் நாறும் ஆத்தி (மண
ஆத்தி மலர்கள் சூடி பிலகு நாலு புஜமுள (கண
ஆடும் பாதா கடல்வரும்
ஆலமுண்ட நீலகண்ட ரருளிய (கண
சிந்தை செய்தேன் நீ யதி
சீக்கிரமென் வாக்கினுள் ளமர்ந்தருள் (கண
காதலாக செந்தமிழ்க்
கந்தசாமி சொந்தகாவி லேதுதி (கண

மாத்தூட்டு பாரதேவே என்ற மெட்டு.

இராகம்-கமாசு, தாளம்-ரூபகம்.

பல்லவி.

18427

ஏன் மலைக்கின்றாய் என் னெஞ்சே
(ஏன்

அனுபல்லவி.

ஆனை முகமொன் றுண்
ஆடுந் தாவிரண் டுண்
ஞான மும்மத முண்
நாலுந் திருவா யுண் (என்

சாணம்.

ஐந்து கரங்களுண்
ஆறு சிரத்தி லுண்
செந்துவர் மேனியுண்
திருநீ றெழாம லுண்
ஈசன் உதவியுண்
எட்டாப் பதவியுண்
தாசன் கந்தசுவா
தண்டமிழ் பாடலுண் (என்

சரஸ்பதி துதி.

கலித்துறை.

கூப்பிடும்போதும் திருநீற்றைநீரிற் குழைத்த மெய்யிற்
காப்பிடுமபோதும் கடிவனம்சென்று கனகநிகர்
பூப்பிடுங்கொண்டவள் பாதம் அர்ச்சிக்கபோதுப் அன்னம்
சாப்பிடுமபோதும் இருப்பாள் என்னுளிற் சரஸ்வதியே.

நான்நம்பும் தேவதே என்ற மெட்டு

இராகம்— தாளம்-ஆதி.

பல்லவி.

பூவந்த வாணியே புதுமதுக் கேணியே
போற்றினே னுனையே (நீ

அனுபல்லவி.

நீவந்தென் னுளினில் நிகழ்த்திடும் பாவினில்
சேரிடுங் குறையகற்றிச்
சீரிய வரங்கொடு (நீ

சரணம்.

பக்தி பாகுரம்

நான்மறந்தாலுஞ் செய்யுநாவென்னுளந் தனி
கல்வியென்னும் நிதிக் கன்னியே நீகதி
கந்தசாமி செந்தமிழ்க்
குகந்தவரம் தந்தருள். (பூ

கொந்தரும் பூங்கணையால் என்ற மெட்டு.
இந்துஸ்தான்-தேசிகம் தாளம்-ஆதி.

பல்லவி

வெண்மலர் வாழ் அன்னையே
வேண்டினேன் உன்னையே—நல்ல (வெ

அனுபல்லவி.

எண்ணே டெழுத்தாகி இருக்கும்நல் விவேகி
எங்கணும் புகழ் பூத்த
கனயோகி வெகுவாகி ஆஹா
என்னிரண்டு கண்மணியே அதி
மின் னினங்கும்பொற் பணியே நல்ல

சரணம்.

நான்முகவன். தானே நாவில் வைக்குந்தேனே
நல்லபெண் மடமானே
உனைநானே மறவேனே உயர்
கற்கலைக்கு வல்லாளே கருங்
கற்கரைக்குஞ் சொல்லாளே நல்ல (வெ

சாஸ்திரம் விநோதாணி தாளமணி பூணி
தாங்கிய புத்தகபாணி
யருட்கேணி கலைவாணி கந்த
சாமி யன்போடு பேணி கவி
சாற்றும் நித்ய கல்யாணி நல்ல (வெ

சுப்பிரமணியா துதி.

இம்-கல்யாணி தாம்-ரூபகம

பல்லவி

சரவணே பவனே—யுனதிரு சரணம் போற்றினேன் (சர

அனுபல்லவி

மரகத மயிலேறி வருவாய் வடிவேல் கரர் விழியாள் கிறு
(சர

சரணங்கள்

தையல் குஞ்சரி தழுவும் நாதா
ஷண்முக சடாக்ஷா வினோதா
கைதொழு மடியேன் முன்னம் வாதா
கனியே கனிரசமேயொரு
தனியே தனி முதலே-சிவ கந்தசாமியே (சர-

தந்திமுகற்குப் பிந்திவந்தவா
தந்தைக்குக் குருவாயு வந்தவா
செந்தில் நகரில் வந்திருந்தவா
திருமால் மருமகனே யெழில்
ஓருமான் மகிழ்குகனே-எனை ரக்ஷிங்காவா (சம

பகவத் தியானம்.

இராகம்-இந்தஸ்தான் தேசிகம் தாளம்-ஏகம்.

பல்லவி.

சிற்சபை நடேசா சிவ
சிதம்பரமென் றோது நெஞ்சே (சிற்

அனுபல்லவி.

கர்ச்சனைசெய் தோடிவருமக்
காலனுலகு பாழடைந்திட (சிற்
தொகையறு

நிற்கின்றபோதிலும் நடக்கின்றபோதிலும்
நிர்மலன் மீது பஜனை
கற்கின்றபோதிலுங் கேட்கின்றபோதிலும்
கடையில் முடியுமபோதிலும்

சரணம்

காலையொடு மாலை தன்னி லும்
வேலைபல பார்க்கு முன்னி லும்
சாலவது பார்த்த பின்னி லும்
சந்ததமுகற் கந்தசாமிதன் சொந்தநாளில் நயந்தபாடிடும் (சி

மருந்தொன்று கொடு சொக்க நாதா என்ற மெட்டு

இராகம் ஆனந்தப் பைரவி தாளம் ரூபகம்

கண்ணிகள்

விரைந்தடிந்தெனை யாட்கொள் வேலா—வெற்பி
வீரவே

உனையன்றி யொரு தெய்வம் உலகத்திலுண்டோ
உள்ளதைப் பேசிடு மென்சொல் லிசைண்டோ (விஜ

அருமையாகிய மறைமுடி வே—மறைமுடி வே
அஞ்ஞானக்கண் காணு மெஞ்ஞான வடிவே (அரு

குருமணி பாவிடும் சற்குரு நாதா
கும்பிடும் ஏழை முன் இன்னமும் வாதா (விஜ

அனைதந்தை குருயாவும் நீயே யாவும் நீயே
அன்பு செய்யுமு என் முன் வந்தருள்வாயே (அஜ

கனிமொழி வள்ளி கனிக்கும் கோமானே
கந்தசுவாமிதன் சிந்தை வாழ்வோனே (விஜ

சர்வத்ர கோவிந்தகாம சங்கீர்த்தன மென்ற மெட்டு.
ராகம்-தேசிக செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

பகவத்தியானம் நீ பண்ணுவா யுள்ளமே
பண்ணுவாயுள்ளமே பண்பாகப் பெருகுமின்பவெள்ளமே (ப

சுகமுற்றிடலாகும் துன்பங்குடி போகும்
சோம்பலில்லாமேலே கொல்லுவாய்
இனியாபபிறவிதனை வெல்லுவாய்
தனிவீப்புசெய் காலனையும் கொல்லுவாய் (ப

உலகத்தவாழ்க்கையில் உள்ளூற்றுப்பார்க்கையில்
ஒன்றுமில்லாமேலே தோணுதே அதை
நன்றென்று பேசவாய் நாணுதே இது
என்றுந்துணையென்று காணுதே ப)

விஷ்ணு துதி.

ராகம்-தோடி. தாளம்-ரூபகம்.

பல்லவி.

நந்த கோவிந்த முகுந்தா
தேவகி மைந்தா (நந்

அனுபல்லவி.

சிந்தைமிசவும் நொந்தேன்
தெரிசனம் காணவந்தேன்
திடத்தொடுனதடி தடக்கை சொடி பிடித்தேன்
படித்தேன் நடித்தேன் தேவாதி தேவா (ந

சரணம்

ஆதி முதற்பொரு ளே
ஆடி மீமனக் காதரு ளே

(ந

தண்டமி ழோது கந்த
சாமிநா னுன் முன் வந்த
தருணமி தல தருணந் தருண மையா
மெய்யா தெய்வா சங்கீகந்தங் கையா (கந்

(8) கணநாதா என்ற மெட்டு

இராகம்-நாட்டை தாளம்-ஆதி.

பல்லவி.

ராமச் சந்த்ரா ஸ்ரீரெகு (ரா

அநுபல்லவி.

சானகி—களினச் செங்கை தழுவிடும் புயாசல

சரணம்.

காமக் குரோதம் முதலிய
கரி சொழித்த இருதயத்தி லேவளர் (ரா
கோசலையாள் அருண்மைக்
குமரனுகி யமரில் ராவணுதி வெல் (ரா
கந்தசாமி பாடிடும்
கவிரசத்தைச் செவிமடுத் தருந்திடும் (ரா

சாந்தமூர்த்தி சன்யாசி காந்தி என்ற மெட்டு

இராகம்-இந்துளதான் செஞ்சுருட்டி தாளம்-ரூபகம்.

பல்லவி

தேவர் போற்றும் ஸ்ரீரெங்கநாத்னே (

அநுபல்லவி

மூவர் முதலவனே முத்திதா (மூ

சரணங்கள்.

அகிலம் யாவும் அளந்த பாதா
அழகிய திரு மகட்கு நாதா
அன்ப னுன்ப தத்தை அணுகி னேனே
ஆள்வாய் என்னை ஆதிமூலா
ஆள்வாய் என்னை (தே

சிரித்த கஞ்சம் நிகர்த்த கண்ணு
திரண்ட கருணை முகிலின் வண்ணு
சிந்தை நொந்து வந்தேன் சிறுவ னுனே
சேவை தருவா யேகோபாலா
சேவை தருவாய் (த

விருதைக் கந்த சாமி நெஞ்சம்
விளங்குந் தெ மே நீ தஞ்சம்
மெய்த்த வ த்தம் விகசித னே
வேண் ஆ மெய்ப்

அய்யா பழனிமலே வேலா என்ற மெட்டு.
ராகம்-சகானா தாளம்-ஆதி

பல்லவி.

சீதா தழுவும் ரெகு ராமா இந்த
சேயனை விட்டகல லாமா (சீதா

அனுபல்லவி.

என்தன் மாதா பிதா குருவும் நீயே
என்முன் வந்து கிருபை புரிவாயே (சீதா)

சரணம்

உந்தனுடைய செழுங் கஞ்சம் —நிகர்
உபய திருவடியே தஞ்சம்
என்றே எனதுடைய நெஞ்சம்
வைக்கும் ஏழை மீதிலென்ன வஞ்சம் (சீதா)

ஆதிமூலமே என்ற ஓலம்—இட்ட
ஆனையைக் காத்தனை பக்காலம்
ஓதும் அடியார்க் கனுகூலம்—செய்வாய்
ஓகோ இதென்ன ஜெக ஜாலம் (சீதா)

செந்திரு மங்கைதன் சமேதா—உயர்
தேவர் துயர் துடைத்த நாதா
கந்தசுவாமி தொழும் பாதா—கடைக்
கண் பார்த்தருள் செய்ய வொண்ணுதா (சீதா)

இ-ம் செஞ்சுருட்டி தாளம்—ஆதி

சங்கொருகை வில்லொருகை
தண்டமுனை வாளொருகை
சக்கரமொருகை கொண்டவா—வுரிகள் தோறும்
மிக்க தயிர் வெண்ணை யுண்டவா—கமழ்
சந்தனமணி மரு மந்தனிலிடை யிடை
தந்தன தனவென வண்டின மூலமிடு
தண்டுளப மாலை யூண்டவா—இருபதத்தை
பண்டு மடியாலே பாண்டவா (சங்

குங்கும மணங் கமழும்
கொங்கை வளைச செங்கை யிளங்
கோபியரோடாடி னின்றவா—கஞ்சன் முதலாம்
பாவிகளின் ஆவி கொன்றவா—அன்பு
கொண்டு பஜனை புரி தொண்டர்கள் பழவினை
தண்டுகள் பலபட வென்ற நாள் புரிபுரி
கோவிந்தா கோவிந்தா விந்தா—நந்தா முகுந்தா
சங் (முற்றிற்று)